# ஜீலை 21 - புனித பிரண்டிசி லாரன்ஸ் (1559-1619)

இவர் பிராண்டிசி என்னும் ஊரில் பிறந்தார். அந்த ஊரில் இவரை "சிறய சம்மனசு" என்று அழைப்பார்கள். ஆறு வயதில் இவர் பிரசங்கங்களைப் படித்துப் பாராமல் அழகாகச் சொல்வார். கடவுள் 16 வயதில் இவரைக் குருவாகும்படி அழைத்தார். வீட்டை விட்டுப் பிரிவது கடினமாயிருந்தது தாய் கண்ணீர் வடித்து அழுதார்கள். இவர் தம் தாயை நோக்கி, "அம்மா, அழவேண்டாம். அமைதியாயிருங்கள். கடவுள் என்னை அழைக்கிறார் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் எனக்காக செபியுங்கள்" என்றார்.

இவர் கப்பச்சின் சபையில் சேர்ந்தார். இவருக்கு அபூர்வ ஞாபக சக்தி இருந்தது. எனவே அநேக மொழிகளைக் கற்றார். தமது மறை உரைகள் வழியாக அநேகரை மனந்திருப்பினார். யூதர்களில் அநேகர் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். 1601-ஆம் ஆண்டில் மகமதியர்கள் ஐரோப்பா மீது படையெடுத்து ஹங்கேரி நாட்டை அடைந்தார்கள். கிறிஸ்தவ வீரர்களை விட எதிரிகளின் வீளர்கள் நான்கு மடங்காக இருந்தார்கள். மகமதியர்கள் வெற்றி பெறுவார்களானால் கிறிஸ்தவ மதத்தையும் நாகரீகத்தையும் அழித்துவிடுவார்கள். கிறிஸ்தவ வீரர்கள் மனம் உடைந்தார்கள். அவர்களை உற்சாகப்படுத்தும்படி குருவான லாரன்ஸ் அவர்களுக்கு பிரசங்கித்தார். சேனைகளின் ஆண்டவராகிய கடவுள்மீது நம்பிக்கை வைக்கும்படி கூறினார். அக்டோபர் 11-ஆம் நாளன்று கொடிய போர் தொடங்கியது. லாரன்ஸ் கையில் சிலுவையை ஏந்தியவராய் குதிரை மீதேறி வீரர்களின் முன் சென்றார். புதுமையாய் வெற்றி கிடைத்தது. எதிரிகள் பதின்மூவாயிரம் பேர் உயிரழந்தனர். இறந்தவர்களை விட்டுவிட்டு அவர்கள் ஓட்டம் பிடித்தவர்கள்.

லுத்தர் திருச்சபைக்குக் கொடுத்த துன்பங்கள் வீரத்துடன் எதிர்த்துப் போராடியவர்களில் இவரும் ஒருவர்.

**சிந்தனை:** பெற்றோருக்குக் கீழ்ப்படிவதை விட கடவுளுக்குக் கீழ்ப்படிவது அதிமுக்கியமானது. உலகத்தை துறக்க விரும்பும் பிள்ளைகளை பெற்றோர் தடுக்காமல் இறை ஞானத்தில் வளர்ப்போம்.

**செபம்:** பிதாவுக்கு கீழ்ப்படிந்து தேவலாயத்தில் தங்கிய இயேசுவே, நாங்கள் உம்மைப் பின்பற்றும் வரம் தாரும்.

